# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
. தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 230/மா/2017

ஆணை எண். 299/2017

நாள் : 26/12/2017

திரு K. தங்கராஜன்,
அழகாபுரம் புதூர்,
சேலம் – 636 016. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு,
சேலம் மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சேலம், அழகாபுரம் புதூர், அருண் நகர், எண்.132, பாரதி தெரு முகவரியில் வசிக்கும் திரு K. தங்கராஜன் அவர்களின் 23.11.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 24.11.2017 அன்று பெறப்பட்டு, 230/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக சூரமங்கலம் வார்டு உதவி ஆணையர் அவர்களின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம், அழகாபுரம் புதூர், அருண் நகர், எண்.132, பாரதி தெரு முகவரியில் வசிக்கும் திரு K. தங்கராஜன் என்பவர் தான் சேலம் மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி 30.04.2013–இல் வயது மூப்பின் காரணமாக பணி ஓய்வு பெற்றதாகத் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட பதவியில் 16.05.1995 அன்று தனக்குச் சிறப்பு நிலை ஊதிய உயர்வு வழங்கப்பட்ட நிலையில், அப்பதவியில் மேலும் பத்து ஆண்டுகள் பணிபுரிந்துள்ள நிலையில் ஒரு போனஸ் ஊதிய உயர்வு வழங்கிட ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற மனுதாரரின் சக அலுவலரான துப்புரவு ஆய்வாளர் திரு R.குணசேகரன் அவர்களிடமிருந்தும், போனஸ் ஊதிய உயர்வு வழங்க ஆணையிடக்கோரி முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டது. ஒரே மாதிரியான கோரிக்கை முறையீட்டு

மனுக்களையே இந்நேர்வின் முறையீட்டு மனுதாரரும், திரு R. குணசேகரன் அவர்களது முறையீடு 217/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, 26.12.2017 நாளிட்ட ஆணை எண்.302/2017–இல் இறுதி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்ட இம்முறைமன்ற நடுவத்தின் செயல்முறையே இந்நேர்வுக்கும் பொருந்தும். எனவே, திரு R. குணசேகரன் அவர்களது நேர்வில் எடுக்கப்படும் நடவடிக்கை போன்று இந்நேர்வின் மனுதாரர் திரு K. தங்கராஜன் நேர்விலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

27/12/17

பெறுநர்

1. உதவி ஆணையாளர்,
சூரமங்கலம் வார்டு,
சேலம் மாநகராட்சி,
சேலம் (இணைப்புடன்)

2. துணை இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை,
சேலம் மாநகராட்சி,
சேலம் – 636 001 (இணைப்புடன்)
(18.12.2017 நாளிட்ட கடித எண். 664/அ1/2017)

2. திரு K. தங்கராஜன்,
132, பாரதி தெரு,
அருண் நகர்,
அழகாபுரம் புதூர்,
சேலம் – 636 016(இணைப்புடன்).

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்